# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

MSSRF Science for Sustainable Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 25/04/2018 | முதல் | 29/04/2018 |
| அறிக்கை எண் : | 032/ 2018 | வெளியீட்டு நாள் : | 24/04/2018 | | |

| கடந்த கால வானிலை 20/04/2018 முதல் 23/04/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 38-40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27-28 |
| மேக மூட்டம் | 2-5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 32-65 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 9-14 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 29-04-2017 8.30 மணி வரை )

| காரணிகள் | 25-04-2018 | 26-04-2018 | 27-04-2018 | 28-04-2018 | 29-04-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 40 | 40 | 40 | 40 | 40 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 27 | 27 | 27 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 60 | 60 | 60 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 40 | 40 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு | தென்கிழக்கு |

**குறுஞ்செய்தி :**

அடுத்த 5 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு இல்லை. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 14 கி.மீ வேகத்தில் தென்கிழக்கு திசையில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கத்தரி & ( கால்நடை)**

தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கத்திரி பயிரில் பழுப்புத் தத்துப் பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படக்கூடும். இவற்றின் தாக்குதலால் கத்தரிச்செடியின் இலைகள் சிறுத்தும், இலைக் காம்புகள் நீளம் குறைந்தும், அளவுக்கு அதிகமான இலைகள், செடியின் நுனிக்குருத்தில் தோன்றி வளர்ச்சிக்குன்றிய செடியாக தோற்றமளிக்கும், மலர்கள் இலை போன்ற அமைப்பாக மாறிவிடும், காய்கள் காய்ப்பது அறிதாகிவிடும். நோய் தாக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். இதனை கட்டுப்படுத்த மிதைல்ஃபாரத்தியான் 50 கிராம் அல்லது டைமீதோயேட் 30கிராம் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். முன்னெச்சரிக்கையாக கத்தரி நடவுக்கு முன்பு 20 கிராம் கார்போஃபியூரான் 50 **STD** கரைசலில் நாற்றுகளின் வேர்களை நனைத்து நடவு செய்யவேண்டும்.

வெயில் காலங்களில், வறண்ட குளம் மற்றும் குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான தண்ணீரில் உள்ள நத்தைகள், கிருமிகள் மற்றும் புழுக்கள் மூலம் கால்நடைகளை நோய் தாக்கக்கூடும். எனவே விவசாயிகள் தங்கள் கால்நடைகள் தண்ணீர் வற்றியுள்ள குளம் குட்டைளில் தண்ணீர் குடிக்க வைப்பதை தவிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.